Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



45F.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), செங்கல்பட்டு மாவட்டம்
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. கி.சந்திரசேகர், B.E., MTP.

நா.க.எண். 23775/2018/செமா.3 நாள் : .03.2021

பொருள் : பலமாடி குடியிருப்புக் கட்டிடம் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு – செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், வீராபுரம் ஊராட்சி, பரனூர் கிராமம், பிளாட் எண்.P21, ச.எண்கள். 78A/2Apt, 2B, 2C, 2D, 2E, 2F, 2G1Pt, 2G2Pt, 2H1, 2H2, 2I, 2J, 2K, 2LPt, 2MPt, 2NPt, 2Opt, 3, 4A, 4B1, 4B2, 4C, 4D, 4E, 4F; 79B/1FPt, 1GPt, 1HPt; 80/7Pt, 8Pt, 6BPt, 9BPt, 98Pt; 99/1Pt, 2; 100/1, 2Pt; 101/1Pt ஆகியவற்றில் 16911.29ச.மீ மனைப்பரப்பில் ஏற்கனவே Tower A & B ஸ்டில்ட் +3 தளங்கள் கொண்ட EWS குடியிருப்பு கட்டுமான உத்தேசத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது ஸ்டில்ட்+12 தளங்களின் 696 குடியிருப்புகளுடன் கூடிய திருத்திய பலமாடி EWS கட்டுமான உத்தேச வரைபடங்களுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை :

1. மனுதாரர் M/s. Mahindra Integrated Township Ltd., அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள் :16.11.2018
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நா.க.எண்.13/2019/சிபி நாள் : 15.02.2021
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் நா.க.எண்.2949/2018/சிபி நாள் :25.05.2018 (க.ஒ./நு.ஊ.இ.எண்.106/2018)
4. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடிதம் நா.க.எண்.3726/2017/செம.3 நாள் :07.06.2018
5. MSB கமிட்டி கூட்டம் நடைபெற்ற நாள் :07.11.2019 (பொருள் எண்.1)
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நா.க.எண். 7486/09/பிஏ2, நாள் : 16.04.2009
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நா.க.எண். 21075/09/பிஏ1, நாள் : 27.06.2012
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நா.க.எண்.12201/2017/சிபி, நாள்.28.09.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நா.க.எண்.14227/2017/சிபி, நாள்.14.12.2017.
10. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 28.03.2012
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நா.க.எண். 16091/2016/MP1, நாள் : 11.05.2017
12. அரசாணை (நிலை) எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 04.06.2004

13. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 04.02.2019

14. அரசாணை (நிலை) எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 31.01.2020.

15. அரசாணை (நிலை) எண்.54 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 12.03.2020

16. அரசாணை (நிலை) எண்.166, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் : 29.11.2018 (Insisting TNRERA Registration)

17. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள் :22.02.2021. (Scrutiny Fee, நன்னிலைவரி, I & A கட்டணம், CC கட்டணம், Display Board Deposit கட்டணம், Security Deposit கட்டணம் செலுத்தக் கோரப்பட்டது)

18. மனுதாரர் கடிதம் நாள் :24.02.2021 (ம) 17.03.2021 (Scrutiny Fee, நன்னிலைவரி, I & A கட்டணம், CC கட்டணம், Display Board Deposit கட்டணம், Security Deposit கட்டணம்)

19. நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை கடிதம் எண். 9860/10 முதி1 நாள்:20.09.2016-ன்படி SCR No: 94547 Dt: 25.09.2018 Online Application No: 201800202020261 Dt : 10.01.2018

---

**உத்தரவு :**

செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், வீராபுரம் ஊராட்சி, பரனூர் கிராமம், பிளாட் எண்.P21, ச.எண்கள். 78A/2Apt, 2B, 2C, 2D, 2E, 2F, 2G1Pt, 2G2Pt, 2H1, 2H2, 2I, 2J, 2K, 2LPt, 2MPt, 2NPt, 2Opt, 3, 4A, 4B1, 4B2, 4C, 4D, 4E, 4F; 79B/1FPt, 1GPt, 1HPt; 80/7Pt, 8Pt, 6BPt, 9BPt, 98Pt; 99/1Pt, 2; 100/1, 2Pt; 101/1Pt ஆகியவற்றில் 16911.29ச.மீ மனைப்பரப்பில் ஏற்கனவே Tower A & B ஸ்டில்ட் +3 தளங்களில் 174 குடியிருப்புகள் கொண்ட EWS குடியிருப்பு கட்டுமான உத்தேசத்திற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்க பார்வை 3-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயலாணைக் கடிதம் மூலம் தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டு பார்வை 4-ல் சுட்டிய மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் முன்னிலைக் கடிதம் மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது ஸ்டில்ட்+12 தளங்களில் Tower A மற்றும் B-ல் 696 குடியிருப்புகளுடன் கூடிய பலமாடி குடியிருப்பு உபயோக கட்டுமான உத்தேசத்திற்கு திருத்திய கட்டிட அனுமதி வேண்டி பார்வை 5-ல் சுட்டிய MSB கமிட்டி கூட்டத்தில் பொருளாக வைக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு உரிய ஆலோசனைகள் பெறப்பட்டு அமையும் பலமாடி குடியிருப்பு கட்டுமான உத்தேசத்திற்கு **க.வ/ந.ஊ.இ.எண்.67/2021** என எண்ணிட்டு மேற்படி திருத்திய பலமாடி குடியிருப்பு கட்டுமானத்தின் பரப்பளவு விவரம் கீழ்கண்டவாறு அமைகின்றது.

AREA STATEMENT:- (in Sq.m.)

| Building Details | | FSI Area in Sq.m. | Non- FSI Area in Sq.m. | Total Builtup Area |
|---|---|---|---|---|
| Tower - A | : | | | |
| Stilt Floor | : | - | 2344.29 | 2344.29 |
| 1st floor to 12th Floor (Typical Floor) | : | 1476.98 x 12 Floor (17723.76) | 115.01 x 12 Floors (1380.12 Sq.m.) | 19103.88 Sq.m. |
| Tower 'A' Total | : | 17723.76 | 3724.41 | 21448.17 |
| Tower - B | : | | | |
| Stilt Floor | : | - | 2307.62 | 2307.62 |
| 1st floor to 12th Floor | : | 1476.98 x 12 Floor (17723.76) | 115.01 x 12 Floors (1380.12 Sq.m.) | 19103.88 Sq.m. |
| Towers 'B' Total | : | 17723.76 | 3687.74 | 21411.50 |
| Podium & Club House | | | - | - |
| | | 341.59 | 1985.13 | 2326.72 |

Total FSI Area : 35789.11 Sq.m.

பார்வை 6 முதல் 15 வரை கண்டுள்ள அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கைகளின்படி Scrutiny Fee, நன்னிலைவரி, I & A கட்டணம், CC கட்டணம், Display Board Deposit கட்டணம், Security Deposit கட்டணம் ஆகியன அரசுக்கு செலுத்தக் கோரி, பார்வை 17-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டு, பார்வை 18-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கூராய்வு கட்டணம் ரூ.91,000/-; நன்னிலை வரி ரூ.80,000/- ; I & A கட்டணம் ரூ. 1,01,31,750/- ; CC Charges ரூ.4,87,000/- Display Board Deposit கட்டணம் ரூ.10,000/- பெறப்பட்டுள்ளது.

Security Deposit-க்கு மனுதாரரின் 17.03.2021 தேதிய கடிதம் மூலம் (HDFC Bank, Dt: 15.03.2021 Rs. 50,66,500/-) Bank Guarantee 5 வருடத்திற்கு பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தேச **திருத்திய பலமாடி குடியிருப்பு கட்டுமான** வரைபடங்களுக்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 47-ன் கீழ் **க.வ./ந.ஊ.து.இ(செ.மா.)எண்.11 (அ முதல் ஐ வரை)/2021 (9 தாள்கள்)** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. The project proponent / Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environmental clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the Ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits. Any violation from the above requirement is liable for action under section 19 of the Environment (Protection) Act, 1986 and Environmental Clearance should be obtained before commencement of construction.

2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

3. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

4. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

5. Applicant should obtain consent from Tamilnadu Pollution Control Board under Section 25 of the Water Act 1974 for discharge of sewage

6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் நீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7. The Provisions in the G.O. (Ms) No. 17, H & UD (UD4(3) Department, dated : 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

8. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016, The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as in the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Regulatory Authority"

நிபந்தனைகள் :-

1. உத்தேச பலமாடி குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் :03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U"Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்பு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**வட்டார வளர்ச்சி அலுவலர், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்** அவர்கள் இறுதி உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்குமாறு **வட்டார வளர்ச்சி அலுவலர், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்** அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

17.3.21

துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

17/3/2021

இணைப்பு : ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் - 2 தொகுப்புகள்
(9 x 2 = 18 )

பெறுநர் : வட்டார வளர்ச்சி அலுவலர்,
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு வட்டம் ,
செங்கல்பட்டு மாவட்டம்.

நகல் : M/s. Mahindra Integrated Township Ltd.,
Administrative Block,
Central Avenue,
Mahindra World City,
Chengalpattu Taluk,
Chengalpattu District - 603 004.

வீராபுரம் ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின்
செயல்முறைகள்
முன்னிலை - திரு.ச.பாபு

நாள் 31.03.2021

ந.க.எண். 01/2021/A1

பொருள்- மனை பிரிவு / மனை உட்பிரிவு / கட்டிட வரைபட அனுமதி - பலமாடி கட்டிட குடியிருப்பு கட்டிடம் - செங்கல்பட்டு மாவட்டம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - செங்கல்பட்டு வட்டம் - வீராபுரம் ஊராட்சி பரனூர் கிராமம் சர்வே எண்கள். 78A/2A,2B,2C,2D,2E,2F,2G,2G1,2G2,2H1, 2H2,2I,2J,2K,2L,2M,2N,2O,3,4A,4B1,4B2,4C,4 D,4E,4F,79B/1F,1G,1H,80/6B,7,8,9B,99/1,2, 100/1, 2,101/1-ல் ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்ட Mahindra World City மனைப்பிரிவில் மனை எண்.P21ல் (Stilt +3) தளங்களில் (Tower A and Tower B) 13793.32 ச.மீ. கட்டிட பரப்பில் 174 குடியிருப்புகள் கொண்ட EWS குடியிருப்பு கட்டுமான உத்தேசத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது stilt + 12 தளங்களின் 696 குடியிருப்புகளுடன் கூடிய திருத்திய பலமாடி EWS கட்டுமான கட்டிடம் / சுற்றுச்சுவர் / கிணறு முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்க உத்தரவிடல்.

1) அரசாணை எண்.295 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I2) துறை நாள்.17.12.2013.

2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.23775/2018/செம3 நாள்.17.03.2021

3) வீராபுரம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.2 நாள்.15.09.2003.

4) தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர், வீராபுரம் ஊராட்சி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் கடிதம் நாள் 30.03.2021 (இறுதி ஒப்புதல் பெற கட்டணம் செலுத்த கோரப்பட்டது).

5) M/s.Mahindra Integrated Township Ltd, என்ற நிறுவனம் செலுத்திய கட்டணம் வங்கி வரைவு ரூ 13,88,495 DD No.202134 Dt:08.03.2021 & ரூ.7,35,295/- DD No.202177 dt:31.03.2021 இறுதி ஒப்புதல் பெற கட்டணம் செலுத்தியது.

6) தொடர்புடைய கட்டத்தின் வரைபடங்கள் மற்றும் ஆவணங்கள்.

உத்தரவு-

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், வீராபுரம் ஊராட்சி, பரனூர் கிராமம் சர்வே எண்கள்:78A/2A, 2B, 2C,2D,2E,2F,2G, 2G1,2G2, 2H1, 2H2,2I, 2J,2K,2L,2N,2O, 3, 4A, 4B1,4B2,4C,4D,4E,4F,79B/1F, 1G, 1H, 80/6B, 7,8,9B, 99/1, 2 100/1, 2,101/1-ல் ஏற்கனவே ஒப்புதளிக்கப்பட்ட Mahindra Word city மனைப்பிரிவில் மனை எண்.P.21ல் (Stilt + 3) தளங்களில் (Tower A and Tower B) 13793.32 ச.மீ. கட்டிட பரப்பில் 174 கொண்ட EWS குடியிருப்பு கட்டுமான உத்தேசத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது (Stilt + 12) தளங்களின் 696 குடியிருப்புகளுடன் கூடிய திருத்திய பலமாடி EWS கட்டுமான உத்தேச கட்டிட வரைபடங்களுக்கு நகர் ஊரமைப்பு துறை மூலம் க.வ/ந.க.ஊ.து (செம) எண். 11/2021 எண எண்ணிட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் உள்ளாட்சி அமைப்பு மூலம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குப்பட்ட கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த அனுமதியானது **23**/03/2021 நாளது முதல் **22**/03/2026-ம் நாள் வரை ஐந்து ஆண்டுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.21,23,120/- (ரூபாய் இருபத்தி ஒரு இலட்சத்து இருபத்தி முன்றாயிரத்து நூற்று இருபது மட்டும்) செலுத்தியமைக்கான பலவகை ரசீது மற்றும் அங்கீரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## நிபந்தனைகள்

1. கட்டித்தின் முன் பக்கத்தில் 1 மீட்டருக்கு குறையாமலும், பின் பகுதியில் 1 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 1 மீட்டருக்கு குறையாமலம் இடை வெளி விட்டப்பட்டிருக்கவேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியன் 1994ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காணிபிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையறுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட் வரைபடங்களுடன் தனி அலுவலக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.
7. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதகிளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்து தலைவருக்கு / தனி அலுவலருக்கு உரிமை உண்டு.
8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்.
9. கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறபடுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.
10. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காவோ கட்டப்படமிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் நகர் ஊரமைப்பு துறை ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
11. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி கட்டிடம் கட்டப்படுதல் மற்றும் பின்பற்றுதல் வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.
13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறியி பின்னரோ 15 தினங்களுக்குள் தனி அலுவலர் (கிஊ) காட்டாங்கொளத்தூர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

31/3/2021.

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
வீராபுரம் ஊராட்சி,
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

31-03-21


31/3/21.

பெறுநர்,

M/s.Mahindra Intergrated Township Ltd.,
Central Avenue, Mahindra World City,
Chengalpet Taluk,
Chengalpet Dist - 603 002.

நகல்.

1. மாவட்ட ஆட்சித்தலைவர், செங்கல்பட்டு.
2. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
(இ) செங்கல்பட்டு, செங்கல்பட்டு மாவட்டம்.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate